கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.30/2022 C/w அசல் வழக்கு எண்.157/2022

வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **செல்வகுமார்** | தொழில் | |
| தகப்பனார் பெயர் | **கிருஷ்ணன்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 30.01.2024 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

வா.சா.1. செல்வகுமார் தரப்பில் முதல் விசாரணை பிரமாண நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

நான் அசல் வழக்கின் 30/2022ல் 1ஆம் வாதி. அசல் வழக்கு எண்.157/2022ல் 1ம் பிரதிவாதி. என் தரப்பில் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரிதான். நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன.

1. வா.சா.ஆ.1 – 31.01.2002ம் தேதியில் T.சுந்தரத்தம்மாள் என்பவர், எனது அப்பா ஜி.கிருஷ்ணனுக்கு எழுதி வைத்த உயில் சாசனம் அசல்

2. வா.சா.ஆ.2 – 28.06.1975ம் தேதியில் எனது அப்பா ஜி.கிருஷ்ணன் பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல்

3. வா.சா.ஆ.3 – 04.08.2005ம் தேதியில் என் தகப்பனார் பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல்

4. வா.சா.ஆ.4 – 07.03.2012ம் தேதியில் என் தகப்பனார் பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல்

5. வா.சா.ஆ.5 – 25.01.2021ம் தேதியில் என் தகப்பனார் , எனக்கும் என் சகோதரர் பாலமுரளிதரன் மற்றும் எங்கள் சகோதரி முத்துலட்சுமிக்கு எழுதி வைத்த உயில் பத்திரம் அசல்

(பிரதிவாதியின் ஆட்சேபணைக்கு உட்பட்டு வா.சா.ஆ.5 குறியீடு செய்யப்படுகிறது)

6. வா.சா.ஆ.6 – 08.05.2005ம் தேதியில் எனது தாயாரின் இறப்பு சான்றிதழ் சான்று நகல்

7. வா.சா.ஆ.7 – 12.06.2021ம் தேதியில் எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க சான்று நகல்

8. வா.சா.ஆ.8 – என் தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் கணினி பதிவிறக்க சான்று நகல்

(வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 கணினி பதிவிறக்க நகல்கள் ஆகும், ஆனால் அவற்றுக்கு இந்திய சாட்சிய சட்டம் 65(B)(4) சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை)

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.01.30 18:59:11 +0530

Additional District Judge,

Dindigul.